Paper ID: IC08

# Shoora and its practice in Islamic state

# இஸ்லாமிய அரசில் ஷூறாவும் அதன் நடைமுறையும்

**A.M. Aashiq**

Faculty of Islamic Studies, Jamiah Naleemiah, Beruwala, Sri Lanka
mohamedaashiq2014@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

ஒூறா என்பது இஸ்லாமிய வாழ்வியல் ஒழுங்கில் அதிமுக்கியத்துவம் பெறும் ஒன்று. மிகச் சிறிய விடயங்களில் கூட ஷூறா என்ற பொறிமுறை விட்டகலாமல் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் இஸ்லாம், மிக உயர்மட்டமான அரசிலும் அப்பொறிமுறை கண்டிப்பாக இருந்தேயாக வேண்டும் என்று வலியுறுத்துகிறது. அரசு இதனை சரிவர உள்வாங்கிக்கொள்ளும் போதுதான் மிகச் சீரான முறையில் ஆட்சியை வழிநடாத்திச் செல்லலாம் என்பது தெளிவு. இப்பொறிமுறைக்கென்று சில நிபந்தனைகளையும், வரையறைகளையும் இஸ்லாம் ஏற்படுத்தியுள்ளது. இப்பின்னணியில் ஷூறா பற்றிய அறிமுகம், இஸ்லாமிய அரசில் அதன் அடிப்படைகள், முக்கியத்துவம், நடைமுறை ஆகியவற்றை நபிகளாரின் வாழ்வு முறைமையின் பின்னணியில் இருந்து இக்கட்டுரை ஆய்வு செய்கின்றது.

**திறவுச்சொற்கள் :** ஷூறா (கலந்தாலோசனை), இஸ்லாமிய அரசு அல்லது ஆட்சி, நல்லாட்சி

**ஆய்வின் அறிமுகம்**

இஸ்லாத்தில் பொது வாழ்விலும் சரி, அரசியல் வாழ்விலும் சரி ஷூறா என்கின்ற கலந்தாலோசனை என்பது இன்றியமையாத ஒன்றாகும். மனிதர்களின் நலன்கள் பாதிக்கப்படக் கூடாது என்பதற்கும், உரிமைகள் பறிக்கப்படக்கூடாது என்பதற்குமே ஷூறா இஸ்லாத்தில் கடமையாகியுள்ளது. அதிலும் குறிப்பாக இஸ்லாமிய அரசு என்கின்ற போது அது இன்னும் அத்தியவசியமாகின்றது.

ஆலோசனை வேண்டுவதனையும், ஆலோசனை வழங்குவதனையுமே ஷூறா என்கின்ற அரபுச்சொல் இஸ்லாமிய பரிபாசையில் குறித்து நிற்கின்றது. **'காரியங்களின் போது (நபியே) நீர் அவரகளிடம் ஆலோசனை கேட்பீராக'** (42:38) என்று அல்லாஹ் தனது தூதருக்கு கட்டளை பிறப்பிக்கின்றான். இந்த அல்குர்ஆனன் வசனம் கலந்தாலோசனை (ஷூறா) செய்வதன் அவசியத்தை உணர்த்தப் போதுமானதாகும்.

இஸ்லாம் ஷூறாவுக்கு கூடிய முக்கியத்துவம் அளித்துள்ளமை ஒரு வியப்பிற்குறிய ஒரு விடயமன்று. குர்ஆன் தன்னகத்தே கொண்டுள்ள அத்தியாயங்களுள் ஒன்று ஷூறா என்ற யெர் கொண்டு அழைக்கப்படுகின்றது. இது எந்தளவு தூரம் இஸ்லாம் ஷூறாவுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது என்பதை எடுத்துக்காட்ட போதுமானதாகும்.

நாம் உலகிலே எந்தவொரு அமைப்பை அல்லது சமூகத்தை அல்லது அரசை எடுத்துக்கொண்டலம் அதிலே கலந்தாலோசனைக்கு ஒரு தனியிடம் உண்டு. தனது குடிமக்கள் நிம்மதியாக, சுபீட்சமாக வாழ வேண்டுமென்று விரும்புகின்ற எந்தவொரு அரசும் ஷூறாவுக்கு முக்கியத்துவம் அளிக்கும் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் தனிநபர்களினதோ அல்லது சமூகங்களினதோ அல்லது

அரசாங்கங்களினதோ நலன்களை அடைந்து கொள்வதற்கு பொருத்தமான சீரிய கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்குறிய ஒரு மிகச்சிறந்த வழியாக ஷூறா காணப்படுகின்றது.

அந்த வகையில் இந்த ஆய்வு இஸ்லாமிய அரசும் அதன் அடிப்படைகளும், இஸ்லாமிய அரசில் ஷூறாவும் அதன் முக்கியத்துவமும், ஷூறாவின் நடைமுறை, அதில் ஈடுபடத் தகுதியானவர்கள், இஸ்லாமிய அரசை நிர்வகிப்பதில் நபிகளாரும் ஷூறாவும் ஆகிய பகுதிகளை ஆய்வு செய்கின்றது.

**ஆய்வுப் பிரச்சினை**

ஷூறா என்ற பொறிமுறை இஸ்லாத்தில் குறிப்பாகவும் ஏனைய கோட்பாடுகளில் பொதுவகவும் வலியுறுத்தப்படும் ஒன்றாகும். இந்தப் பொறிமுறை இஸ்லாமிய அரசில் எந்த வகையில் காணப்பட வேண்டும் அதன் நடைமுறை எப்படி அமைதல் வேண்டும் என்பதைக் கண்டறிவதே ஆய்வுப் பிரச்சினையாகக் கொள்ளப்படுகின்றது.

**ஆய்வின் நோக்கங்கள்**

1. இஸ்லாமிய அரசியல் சிந்தனையின் அண்மைக்காலப் போக்குகளில் ஷூறாவின் தேவையையும் அவசியத்தையும் உணர்த்துதல்.
2. நல்லாட்சியொன்றை நிறுவுவதற்கான அடிப்படையாக ஷூறாவை இணங்காட்டல்.
3. முன்மாதிரி மிக்க அரசை நிறுவுவதில் நபிகளாரின் ஷூறா செயன்முறையின் வகிபாகத்தை கண்டறிதல்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வு இஸ்லாம் மார்க்கம் சார்ந்து அதன் அடிப்படைக் கோட்பாடுகளுள் ஒன்றை மையப்படுத்தி அமையப்பெற்றுல்லதால் நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள் போன்ற இரண்டாம் நிலைத் தரவுகள் இவ்வாய்வுக்கென எடுத்தாளப்பட்டுள்ளன.

## 1. இஸ்லாமிய அரசும் அதன் அடிப்படைகளும்

இஸ்லாம் ஒரு பூரண வாழ்க்கைத்திட்டம் என்ற வகையில் மனிதனுக்கு சிறந்த ஷூழல் ஒன்றை ஏற்படுத்திக் கொடுப்பது இன்றியமையாத தேவையாகும். இதனை நிறைவு செய்ய இஸ்லாம் மக்களுக்கு ஆன்மீக ரீதியாகவும், லௌகிக ரீதியாகவும் மனித இயல்போடு உடன்படுகின்ற சட்டங்களில் இஸ்லாமிய அடிப்படையிலான ஆட்சிக்கு உடன்படுகின்றது. அத்தகைய அரசு சமூகத்தை நன்மையின் அடிப்படையிலும், நீதியின் அடிப்படையிலும் வாழச் செய்வதற்கும், சத்தியத்தை நிலைநிறுத்தி அசத்தியத்தை அழிப்பற்கும் வழியேற்படுத்துகின்றது. இவ்வரசில் அல்லாஹ்வை நெறுங்குவதும், நன்மைகள் செய்வதும் இலகுவான விடயங்களாக மாறும்.

மேலும், இஸ்லாமிய அரசு என்ன என்பதை நவீன கால இஸ்லாமிய அறிஞர் யூசுப் அல்கர்ளாவி அவர்கள் பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகிறார்கள். **“இஸ்லாமிய அரசு என்பது விண்ணுலக(தெய்வீக)சட்டங்களை மண்ணுலகில் நிலைநிறுத்தும் அல்லாஹ்வின் ஏவல், விலக்கல்களை மக்கள் எடுத்துநடப்பதை உத்தரவாதப்படுத்தும் சிவில் அரசாகும்.**”[1]

[1] எம்.எப். ஸைனுல் ஹுஸைன்: 2012 இஸ்லாமிய அரசியல், அல்ஹஸனாத் வெளியீட்டகம், கொழும்பு-09 பக் 32 (இது யூஸுப் அல் கர்ளாவியின் ‘‘மின் பிக்ஹி அத் தவ்லா பில் இஸ்லாம்’’ என்ற நூலின் தமிழ் மொழி பெயர்ப்பாகும்)

இந்த வரைவிலக்கணத்தின் அடிப்படையில் தீமையின் எல்லா வடிவங்களையும் அழித்தொழிப்பதும், நன்மையின் வடிவங்கள் அனைத்தையும் நிலைநாட்டுவதும், வளர்ப்பதும் தான் இஸ்லாமிய அரசின் இன்றியமையாத குறிக்கோள்களாகும்.

எனவே, இதனடிப்படையில் இஸ்லாமிய அரசொன்று பின்வரும் மூலங்களை உள்ளடக்கியதாக இருக்கும் என சாரம்சப்படுத்தலாம்.

**01.தௌஹீத்:-** இந்த உலகின் ஆட்சி, அதிகாரம் அல்லாஹ்வுக்கு மாத்திரமே உரித்துடையதாகும் என்பதே இதன் பொருளாகும்.

**02.ரிஸாலத்:-** இறை சட்டத்தை மனிதன் பெரும் வழியே ரிஸாலத் எனப்படும்.


**03.ஷரீஆ:-** அல்குர்ஆன் சுன்னாவினது மொத்த கூட்டுத்தொகுப்பே ஷரீஆ ஆகும்.

**04.மஜ்லிஸ் அஷ்ஷுறா:-** சமூக அரசியல் விவகாரங்களில் அதிகார தரப்பினருக்கு அலோசனை வழங்கும் மையமே இதுவாகும்.

**05.நீதித்துறை:-** இறைவனின் சட்டங்களை மக்களிடையே பாரபட்சமின்றி செயற்படுத்துவதையே இது குறிக்கும்.

**06.கிலாபத்(இறையாட்சி):-** மனிதன் இறைவனின் பிரதிநிதியாக நின்று அவனுடைய சட்டங்களை அமுல்படுத்தும் ஆட்சி. உதாரனமாக.. கலீபா, அமீர்[2]

எனவே, மேற்குறிப்பிட்ட இஸ்லாமிய அரசின் அடிப்படைகளுள் ஒன்று ஷுறா என்கின்ற கலந்தாலோசனை ஆகும். இதனைப் பின்வரும் படம் தெளிவாகக் காட்டுகின்றது.




**படம் 01**

**2. இஸ்லாமிய அரசில் ஷுறாவும் அதன் முக்கியத்துவமும்**

**ஷுறா**

இஸ்லாமிய அரசினதும், இஸ்லாமிய உம்மத்தினதும் அடையாளமாக ஷுறா விளங்குகின்றது. அதன் வரைவிலக்கணத்தைப் பொறுத்த வரையில் பின்வறுமாறு கூறலாம்.

---

[2] A.J.L. வஸீல் 2010 இஸ்லாமிய மற்றும் மேற்கத்தேய அரசியல் கருத்தியல்கள் ஓர் ஒப்பீடு, எபெக் வெளிவாரி பட்டப்படிப்பு நிலையம், மருதமுனை. பக் 15

1. **மொழிக்கருத்து :** இது ஷாற என்ற அரபுச் சொல்லிலிருந்து தோற்றம் பெற்றது. அதாவது இதன் கருத்து **பார்வைக்குத் தெரிவுக்கு விடப்பட்டதன் பின் அதிலிருந்து சிறந்ததை தெரிந்தெடுத்தல்.**

2. **பரிபாஷைக்கருத்து : சமூகத்திலுள்ள நிபுணத்துவம் மற்றும் அனுபவம் பொருந்தியவர்களிடத்தில் கருத்துப்பரிமாற்றலுக்கு சந்தர்ப்பம் உள்ள பொதுவான விடயங்களில் சமூகத்தின் விருப்பை பிரதிபலிக்கக்கூடியதும் மிகச்சிறந்ததுமான கருத்தை ஆய்ந்தெடுத்து நடைமுறைப்படுத்துவதற்காக வேண்டி கருத்துக்களை திரட்டுவது தான் ஷூறா (கலந்தாலேசனை) எனப்படும்.**[3]

(கலாநிதி அதிய்யா அத்லான்)

எனவே, இந்த வரைவிலக்கணத்தின் படி ஷூறாவானது முக்கிய மூன்று அடிப்படைகளைக் கொண்டதாகும்.

1. ஷூறா செய்யப்பட முடியுமான அம்சம்
2. அதில் ஈடுபடத்தகுதியானவர்கள்
3. அதனால் எட்டப்படக்கூடிய இலக்குகள்

**அதன் முக்கியத்துவம்**

திருக்குர்ஆனில் ''அஷ்ஷூறா'' அத்தியாயத்திலும் (42:38), ஆல இம்ரான் அத்தியாயத்திலும் (3:159) அல்லாஹ் ஷூறா அமைப்பைப் பற்றி கூறியுள்ளான்.

1. ''அவர்களுடைய ஒவ்வொரு காரியமும் தங்களுக்குள் கலந்தாலோசித்தலாக இருக்கும்'' (42:38)
2. ''சகல காரியங்களிலும் அவர்களுடன் கலந்தாலோசனை செய்யும்'' (3:159)

ஷூறா என்பது இஸ்லாமிய அடிப்படையிலான அரசியல் கெள்கையின் முக்கியத்தூணாகும். ஆலோசனையில்லாமல் சமூக, அரசியல் கொள்கையை வகுப்பதும் நடைமுறைப்படுத்துவதும் ஜாஹிலிய்யா அமைப்பின் செயன்முறையாகும். இஸ்லாம் வகுத்துள்ள நியதிகளை மீறும் செயலாகும்.

அரசியலில் ஏன் ஷூறாவிற்கு இந்த அளவு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது என்றால் அதற்கு பின்வருமாறு பதில் கூறலாம்.

1. **பலரோடு தொடர்புள்ள ஒரு ஆட்சி விடயத்தில் ஆட்சியாளன் தன்னிச்சையாக முடிவெடுப்பதோ மற்றவர்களைப் புறக்கணிப்பதோ வரம்பு மீறுதலாகும். பலரோடு சம்பந்தப்பட்டுள்ள காரியங்களில் யாரும் தன்னுடைய சொந்த முடிவுகளை அமுல்படுத்தக்கூடாது. பலரிடம் கலந்தாலோசனை செய்த பின்பே முடிவெடுக்க வேண்டும். இது தான் நியாயமான முறையாகும்.**

[3] அம்மார் ஹஸீப் (2016) உமர் (ரழி) ஆட்சிக்காலத்தில் கலந்தாலோசனை, (பட்டப்பரீட்சைக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வு) ஜாமிஆ நளீமிய்யா, பேருவலை பக் 9

2. **கூட்டுப் பொறுப்புகளில் ஆட்சியாளன் தனது சொந்த முடிவுகளை அமுல் படுத்த துடிக்கின்றான் என்றால் தன்னுடைய சொந்த ஆசைகளுக்காக பிறருடைய உரிமைகளைப்பறிக்கின்றான் அல்லது தன்னை மிகப் பெரிய மனிதனாகக் கருதுகின்றான். பிறரைக் கேவலமாக நினைக்கின்றான் என்று பொருள். ஒழுக்க ரீதியிலாக இவ்விரண்டுமே மிகவும் மோசமான செயலாகும்.**

3. **பிறர் நலத்தோடு தொடர்புடைய சமூக, அரசியல் விடயங்களில் முடிவெடுப்பது என்பது மிகப்பெரிய பொறுப்பாகும். உண்மையிலேயே அல்லாஹ்வுக்குப் பயப்படுகின்ற ஒரு ஆட்சியாளன் அதைப்பற்றி எப்படியெல்லாம் நாளை அல்லாஹ் கேள்வி கேட்பானோ என்று அஞ்சிக் கொண்டே இருப்பான். எனவே தனியாக அப்பொறுப்பை சுமக்க அவன் தயாராகவே மாட்டான். மற்றவர்களுடனும் கலந்தாலோசித்த பின்னரே சரியான முடிவை எடுப்பான்.**

4. **ஷூறாவின் முக்கியத்துவத்தை உணர்த்தும் மற்றொரு காரணிதான் அது அடக்குமுறையையும் அத்துமீறலையும் தடுக்கின்றது. ஷூறா அடக்குமுறைக்கு எதிரானதாகும். ஷூறாவுள்ள இடத்தில் அடக்குமுறை இடம்பெற மாட்டாது. அந்த அடக்குமுறை தொடர்ந்தும் நிலைபெற்றால் அது அத்துமீறலாக மாறும். அதன் விளைவாக அநியாயங்களும் அட்டூழியங்களும் உருவாகும் எனவே, ஷூறா அடிப்படையில் பிரச்சினைகள் தீர்க்கப்படுமாயின் அங்கு அடக்குமுறைக்கு இடமிருக்காது. அடக்குமுறையென்பது ஒரு நோய். அதனை குணமாக்குவதற்கான மருந்து ஷூறாவாகும்.**

5. **ஷூறா ஆட்சியாளனுக்கும் மக்களுக்கும் இடையிலான ஒற்றுமையை ஏற்படுத்துகின்றது. திருப்தி, கட்டுப்படுதல், நிம்மதி என்பன ஷூறாவின் மூலம் வெளிப்படுகின்ற முடிவுகளில் காணப்படுவதால் இது அனைவருக்கும் மத்தியில் ஐக்கியத்தை உண்டுபன்னுகின்றது. இதனைத்தான் குர்ஆனும் குறிப்பிடுகின்றது.**
   *''இன்னும் (தாய் தந்தையர்) இருவரும் பரஸ்பரம் இணங்கி ஆலோசித்துக் கொண்டால்...'' (2:233)* **இதற்கு விளக்கம் கூறும் இமாம் இப்னு ஆஷூர் (1973) *"பரஸ்பரம் கலந்தாலேசனை மூலம் சரியான கருத்து வெளிப்படுகின்றது. அதன் மூலம் பரஸ்பரம் திருப்தியும் அடையப்படுகின்றது."*[4]**

ஆகவே, மேற்கூறிய காரணங்கள் ஷூறாவின் முக்கியத்துவத்தை எமக்கு தெளிவாக சுட்டிக்காட்டுகின்றது. ஷூறா என்பது அரசியலில் மாத்திரமன்றி இஸ்லாத்தில் பொது வாழ்க்கையிலும் கடைப்பிடிக்கவேண்டிய ஒரு அம்சமாகும்.

### 3. ஷூறாவின் நடைமுறை

இதன் மூலமாக நாடப்படுவது கலந்தாலோசனையின் இறுதியில் பெறப்படும் தீர்மாணம் சம்பந்தமான விடயமாகும். அதாவது ஆடசியாளன் கட்டாயம் அந்தத் தீர்மாணத்தை

[4] மௌலானா மௌதூதி (ரஹ்) 2000 இஸ்லாமிய ஆட்சியின் எழுச்சியும் வீழ்ச்சியும் (i) ஹிந்துஸ்தான் பதிப்பகம் சென்னை. பக் 266
கலாநிதி அஹ்மத் அர் ரைஸூனி 2015 அஷ்ஷூறா பீ ம.்.ரகதில் பினாஈ, தாரு ராஸி, ஜோர்தான். பக் 35

நடைமுறைப்படுத்த வேண்டுமா? அல்லது அவர் அதனை விட்டு விலகி இன்னொரு தீர்மாணத்திற்கு செல்ல முடியுமா? என்பதை இது குறிக்கிறது.

இது தொடர்பில் இமாம் இப்னு தைமிய்யா (1328) கூறியுள்ள ஒரு கருத்து கவனிக்கத்தக்கதாகும். **"கலந்தாலேசனை செய்பவர் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக குர்ஆன் ஸுன்னாவிலிருந்து அது தொடர்பான தெளிவான முடிவு அவருக்குக் காண்பிக்கப்படுமானால் அவர் கட்டாயம் அதற்குக் கட்டுப்பட வேண்டும். ஆனால் அவ்வாரல்லாமல் கருத்து வேறுபாட்டுக்கு உட்பட்டவிடயமாக இருந்தால் அவர் அனைவரினதும் கருத்துக்களையும் பெற்று அவற்றில் குர்ஆன் ஸுன்னாவிற்கு மிக நெருக்கமான கருத்தை தெரிந்தெடுக்க வேண்டும். ஆயினும் குர்ஆன் ஸுன்னாவிற்கு மிக நெருக்கமான கருத்தை தேர்ந்தெடுப்பதில் அவருக்கு ஏதேனும் தடங்கள் காணப்படும் பட்சத்தில் அவர் அந்த சபையிலுள்ள குர்ஆன் ஸுன்னாவில் மிகவும் ஆழமுள்ள ஒருவரது கருத்தைப் பின்பற்ற வேண்டும்.**[5]

மேலும், இமாம் இப்னு முலக்கன் (1402) அவர்களும் ஷுறாவின் நடைமுறையைப் பொறுத்தவரையில் இமாம் இப்னு தைமிய்யா அவர்கள் கூறியது போன்று குர்ஆன் ஸுன்னாவிற்கு மிக நெருக்கமான கருத்தை தெரிவு செய்வதாகத் தான் இருக்க வேண்டும் என்பதை வலியுருத்துகிறார்.

அதேபோல அவர் கூறுகின்ற போது கலந்தாலோசனை வழங்குபவர்கள் முன்வைத்த கருத்தல்லாத இன்னுமொரு விடயத்தில் தான் சத்தியம் பிரதி பலிக்கின்றது என்று ஆட்சியாளன் காணும் போது அவர் முன்வைக்கப்பட்ட அனைத்து ஆலோசனைகளுக்கும் நிகரான சத்தியத்திற்கு மிக நெருக்கமாக தான் காணும் கருத்தை அவர் செயல்படுத்த முடியும்.

ஆயினும் அவ்வாறு மாற்றமாக தெரிந்தெடுப்பதாயின் குறிப்பிட்ட ஆட்சியாளன் அறிவில் மிக ஆழமுள்ளவராக இருக்கவேண்டும் என்ற நிபந்தனையையும் விதிப்பதோடு இதற்கு மிகச்சிறந்த உதாரணமாக **"அபூபக்கர் (ரழி) அவர்கள் ஸகாத் தர மறுத்தவர்களுடன் போராடுவது தொடர்பான முடிவுக்கு வந்ததையும் குறிப்பிட்டுக்காட்டுகிறார்.**[6]

இறுதியாகக் கூறுவதாயின் ஆட்சியாளரைப் பொறுத்தவரையில் அவருக்கு கருத்து வேறுபாட்டுக்குரிய விடயத்தில் சத்தியத்திற்கு மிக நெருக்கமானதைத் தெரிவு செய்கின்ற உரிமையிருப்பது போலவே கலந்தாலோசனை சபையில் அனைத்து அறிஞர்களும் ஒருமித்து உடன்படுகின்ற ஒரு விடயத்தை அலட்சியமாக விட்டு விடுவதற்கான அதிகாரமும் அவருக்குக் கிடையாது.

## 4. ஷுறாவும் அதில் ஈடுபடத் தகுதியானவர்களும்

மேலே குறிப்பிட்டது போன்று சத்தியத்திற்கு மிக நெருக்கமான தீர்வைப் பெற வேண்டுமாயின் அங்கு ஆலோசனை வழங்குபவர்களும் அந்த நோக்கத்தை அடைவதற்கான தகுதியுடையவர்களாக இருக்க வேண்டும். அப்போதுதான் ஷுறாவின் இலக்கானது முழுமையாக எட்டப்படுவது சாத்தியமாகும்.

---

[5] அம்மார் ஹஸீப் 2016 உமர் (ரழி) ஆட்சிக்காலத்தில் கலந்தாலோசனை, (பட்டப்பரீட்சைக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வு), ஜாமிஆ நளீமிய்யா, பேருவலை பக் 28

[6] மேலது, பக் 29

1. **நம்பகமானவர்**

இது கலந்தாலோசனை பெறப்படுபவரது அடிப்படைத் தகைமையாகும். இதனைத்தான் பின்வரும் நபி மோழி உணர்த்தக் கூடியதாக இருக்கின்றது. **நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். கலந்தாலோசனை செய்யப்படுபவர் நம்பிக்கைக்கு பாத்திரமானவராக இருக்க வேண்டும். (அபூதாவூத் 5128)**

2. **அறிவுள்ளவர்**

கலந்தாலோசனை செய்யப்படுபவர் தன்னிடம் கலந்தாலோசனை பெறப்படுகின்ற விடயத்தில் மிகச் சரியென்று தான் காண்கின்ற விடயத்தை மாத்திரம் தான் வெளிவிட வேண்டும். இமாம் புகாரி தனது ஸஹீஹில் பின்வறுமாறு ஒரு ஹதீஸைப் பதிகின்றார். அதாவது "**நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு இமாம்கள் அறிவுடையவர்களில் நம்பிக்கையானவர்களிடம் கலந்தாலோசனை பெறுபவர்களாக இருந்தார்கள்.**" எனவே ஷூறாவில் ஈடுபடுபவர்கள் அறிவும் அமானிதமும் ஒரு சேரப்பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்பதே அவர்களுக்குரிய அடிப்படைத் தகைமகளாகும்.

3. **தக்வா உள்ளவர்**

இமாம் இபனு அப்பாஸ் (ரழி) அவர்கள் உமர் (ரழி) அவர்களது ஷூறா சபையைப்பற்றி குறிப்பிடும் போது குர்ராக்களாக அவர்கள் இருந்தனர் எனக் கூறுகின்றார். அந்தக் காலத்தில் குர்ராக்கள் எனப்படுவோர் குர்ஆனை மனனமிட்டவர்கள் மாத்திரமன்றி அதில் ஆழமான அறிவுள்ளவர்களாகவும் தக்வா உள்ளவர்களாகவும் இருந்தனர். (புகாரி 7286) ஆகவே, நம்பகத்தன்மை அறிவு, தக்வா என்பவையே ஒருவர் ஷூறாவில் ஈடுபடுவதற்கான அடிப்படைத்தகைமைகளாகும்.[7]

### 5. இஸ்லாமிய அரசை நிர்வகிப்பதில் நபியவர்களும் ஷூறாவும்

நபி (ஸல்) அவர்கள் மக்காவை விட்டு மதீனாவிற்கு ஹிஜ்ரத் சென்று அங்கு படிப்படியாக இஸ்லாமிய அரசொன்றை நிருவுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். அவர்கள் அந்த அரசை நிருவ மூன்று பிரதான அடிப்படைகளை கைக்கொண்டார்கள்.

1. **மஸ்ஜித் ஒன்றை நிருவுதல்.**
2. **அனைவருக்கும் மத்தியில் சகோதரத்துவத்தை ஏற்படுத்துதல்.**
3. **யூதர்களுடன் உடன்படிக்கை செய்தல்.**

இந்த முதலாவது அடிப்படையான மஸ்ஜிதே நபிகளாரின் இஸ்லாமிய அரசை நிருவகிப்பதற்கான ஷூறா சபையாக காணப்பட்டது. அந்த சபை தற்போதைய பாராளுமன்ற அமைப்பைப் போன்றது. அங்கு அவர்கள் இஸ்லாமிய அரசின் போர், சமாதான, தூதுக்குழு அனுப்புதல், கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுதல் மற்றும் கோத்திரங்களுடனான உறவு பேன்ற விடயங்களில் ஷூறாவை மேற்கொள்பவர்களாக இருந்தார்கள்.[8]

---

[7] A.J.L. வஸீல் 2010 இஸ்லாமிய மற்றும் மேற்கத்தேய அரசியல் கருத்தியல்கள் ஓர் ஒப்பீடு, எபெக் வெளிவாரி பட்டப்படிப்பு நிலையம், மருதமுனை. பக் 20

[8] அஷ்ஷெய்க் முஹம்மத் அல் கஸ்ஸாலி, பிக்ஹீஸ் ஸீறா, தாருத் த.்.வா, கெய்ரோ.

இதனால் தான் அவர்களைப் பற்றி அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் பின்வருமாறு அறிவிக்கின்றார்கள். **“தனது தோழர்களிடத்தில் அதிகமாக கலந்தாலோசனை செய்பவர்களாக நபியவர்களை விடவும் வேறொருவரை நான் காணவில்லை.” (திர்மிதி 1636)**

முஸ்லிம்களின் ஆலோசனைகளைக் கேட்டுப்பெற வேண்டும். எல்லா விவகாரங்களையும் முஸ்லிம்களோடு கலந்தாலோசிக்கப்படவேண்டும் என்பவை ஒரு முஸ்லிம் ஆட்சியாளரின் தவிர்க்க முடியாத கடமையாகும். இது நபி (ஸல்) அவர்கள் பின்பற்றி வந்த கட்டாய வழிமுறையாகும். உதாரணமாக:

1. **பத்ர் போருக்கு முன் நபி (ஸல்) அவர்கள் தங்களுடைய தோழர்களை கலந்தாலோசித்தார்கள்.**
2. **உஹதுப்போரின் போதும் அவர்கள் தோழர்களோடு மிகவும் விரிவான ஆலோசனைகளை நடத்தினார்கள். எதிரிகளை மதீனாவிற்கு உள்ளிருந்தே சந்திப்பதா? அல்லது வெளியே சென்று சந்திப்பதா? என்பதைக்குறித்தும் ஸஹாபாக்களிடம் கலந்தாலோசித்தார்கள்.**
3. **அஹ்ஸாப் யுத்தத்தில் அகழி தோண்டல் சம்பந்தமாக ஸஹாபாக்களுடன் கலந்தாலேசித்தார்கள்.**

இப்படி நபி(ஸல்) அவர்கள் தன்னைச் சார்ந்தோரிடம் ஷூறாவைப் பெற்றே நடந்தார்கள். என்பதற்கு ஏராளமான மேற்கோள்களைக்காட்டலாம். எனவே, இவற்றினூடாக வெளிப்படுவது யாதெனின் மக்கள் விரும்பக்கூடிய நல்லாட்சியாக நபியவர்களுடைய ஆட்சி காணப்பட்டது என்று சொன்னால் அதற்கான அடிப்படைக்காரணம் அவர்கள் இந்த ஷூறா என்ற செயன்முறை மூலம் அனைவரது கருத்துக்களுக்கும் மதிப்பளிப்பவர்களாக இருந்தது மட்டுமன்றி சமூகத்தின் விருப்பத்தை பிரதிபலிக்கின்ற வகையிலான முடிவுகளை அதன் மூலமாக அன்னாருக்கு எட்டமுடியுமாக இருந்தமையுமாகும்.

மேலும் நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ்வின் புறத்தலிருந்து வஹியினுடைய வழிகாட்டல்கள் கிடைக்கப்பெற்ற நிலையிலும் சமூகத்தின் விருப்பத்தை வஹி மூலம் அறிவிக்க அல்லாஹ் அறிவாற்றல் பெற்றிருந்தும் கூட நபி (ஸல்) அவர்கள் தனக்குப்பின்னர் இவ்வாறான வஹியினுடைய வழிகாட்டல் கிடைக்கப்பெறாது என்பதனால் தனது சமூகத்திற்கு அழகிய முன்மாதிரியாக இந்த ஷூறாவை காட்டித் தந்துள்ளார்கள். இதனை அல்லாஹ் அன்னாருக்கு அல்குர்ஆனின் ஏவல் மூலம் கடமையாக்கியுள்ளதை நாங்கள் அவதானிக்கலாம். எனவே இதன் மூலமாக ஆட்சியாளர்கள் கட்டாயம் ஷூறா என்ற செயன்முறையை தமது அட்சியில் கடைப்பிடிக்க வேண்டும் என்பதன் அவசியத்தை இது எமக்கு உணர்த்துகின்றது.

**ஆய்வின் முடிவுகள்**

மேற்குறித்த ஆய்வின் பின்னணியில் நோக்குகின்ற போது இஸ்லாமிய அரசில் ஷூறா என்பது பிரிக்கமுடியாத ஒன்று என்பது புரிகிறது. அதே போன்று ஷூறாவுக்கென்று சில முறைமைகள் இருப்பதும் புலனாகிறது.

**சுருக்கமும் முடிவும்**

இஸ்லாமிய அரசு என்பது ஆட்சியுரிமைகள் அனைத்தும் அல்லாஹ்வுக்கே உரியதும் அதன் யாப்பாக அல்குர்ஆனே திகழும் என்பதும் நிதர்சனமாகும். அதற்கென்றே சில அடிப்படைகளும்

காணப்படுகின்றன. அவை பூரணமானாலே அது இஸ்லாமிய அரசு அல்லது ஆட்சி என்று அழைக்கப்படும். அவ்வாறான அடிப்படைகளுள் மிகப் பிரதானமான அடிப்படைதான் ஷூறா என்ற கலந்தாலோசித்தல் செயன்முறையாகும். இந்த ஷூறா என்ற அம்சம் இஸ்லாமிய ஆட்சியில் எவ்வளவு முக்கியமானது என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

மேலும், அந்த ஷூறா செயன்முறைக்கான நெறிமுறைகளையும் இஸ்லாமிய அறிஞர்கள் வகுத்துள்ளனர். அந்த ஷூறாவில் ஈடுபடக்கூடியவர்கள் அதில் எடுக்கப்படும் முடிவுகள் அதன் பரப்புகள் என இது பலவகைப்படும். எனவே, தான் இந்த ஆய்வில் இஸ்லாமிய அரசில் ஷூறாவும் அதன் நடைமுறையும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. நவீன காலத்தில் இஸ்லாமிய அரசியல் சிந்தனைப் போக்குகள் தோன்றிய வண்ணமே இருக்கின்றன. அவை பற்றிய ஆய்வுகளும் மேற் கொள்ளப்பட வேண்டியிருக்கிறது.


**உசாத்துணைப்பட்டியல்**

**நூல்கள்:**

1. எம்.எப். ஸைனுல் ஹுஸைன்: (2012) இஸ்லாமிய அரசியல், அல்ஹஸனாத் வெளியீட்டகம், கொழும்பு-09 (இது யூஸுப் அல் கர்ளாவியின் ''மின் பிக்ஹி அத் தவ்லா பில் இஸ்லாம்'' என்ற நூலின் தமிழ் மொழி பெயர்ப்பாகும்)
2. A.J.L. வஸீல் (2010) இஸ்லாமிய மற்றும் மேற்கத்தேய அரசியல் கருத்தியல்கள் ஓர் ஒப்பீடு, எபெக் வெளிவாரி பட்டப்படிப்பு நிலையம், மருதமுனை.
3. மௌலானா மௌதூதி (ரஹ்) (2000) இஸ்லாமிய ஆட்சியின் எழுச்சியும் வீழ்ச்சியும் (i) ஹிந்துஸ்தான் பதிப்பகம் சென்னை.
4. கலாநிதி அஹ்மத் அர் ரைஸுனி (2015) அஷ்ஷூறா பீ ம.்.ரகதில் பினாஈ, தாரு ராஸி, ஜோர்தான்.
5. அஷ்ஷெய்க் முஹம்மத் அல் கஸ்ஸாலி, பிக்ஹீஸ் ஸீறா, தாருத் த.்.வா, கெய்ரோ.
6. இமாம் இப்னு தைமிய்யா மஜ்மூ அல் பதாவா, தாரு ஆலமில் குதுபி, ரியாத்
7. இமாம் இப்னு முலக்கன் அத்தவ்ழிஹ் லி ஷரஹின் ஜாமிஇஸ் ஸஹீஹ், தாருல் பலாஹ், கத்தார்.
8. ஸகி பௌஸ் (நளீமி), இஸ்லாமிய அரசியல் சிந்தனையின் அண்மைக்காலப் போக்குகள், உரையாடலுக்கும் ஆய்வுக்குமான மையம், கொழும்பு.
9. அப்துல் கரீம் ஸைதான், இஸ்லாமிய அரசின் பணிகள்

**ஆய்வுக்கட்டுரைகள்:**

1. அம்மார் ஹஸீப் (2016) உமர் (ரழி) ஆட்சிக்காலத்தில் கலந்தாலோசனை, (பட்டப்பரீட்சைக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வு), ஜாமிஆ நளீமிய்யா, பேருவலை

**சஞ்சிகைகள்:**

1. இஸ்லாமிய சிந்தனை, ஜாமிஆ நளீமிய்யா, பேருவலை.